# மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி
## அலகுப் பரீட்சை - 04

பாடம் : இந்துநாகரிகம் நேரம் : 1 மணி

**மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1) இராமகிருஷ்ண மடத்தை தாபித்தவர்
1.தயானந்த சரஸ்வதி 2. துளசிதாசர் 3. சுவாமி விவேகானந்தர் 4. நாவலர் 5.கைலாசநாத குருக்கள்

2) கபீர் தாசர் பிறந்த ஆண்டாக அமைவது
1. 1398 2. 1400 3. 1550 4. 1750 5. 1250

3) கிருஷ்ண கீதாவளி, ஜானகி மங்களம், சிரசந்தீபனி முதலிய நூல்களை எழுதியவர்
1.விபுலானந்தர் 2.துளசி தாசர் 3.ஸ்ரீ சைதன்யர் 4.அருணாசல தேசிகர் 5.இரவீந்ரநாத்

4) மதம்மாறியவர்களை மீண்டும் இந்துமதத்தில் சேர்த்திட 'சுத்தி' என்னும் சடங்குவிதியை உருவாக்கியது
1.சைவ வித்யா விருத்தி சங்கம் 2.இராமகிருஷ்ண மிஷன் 3. ஆரிய சமாஜம்
4.பிரம்ம சமாஜம் 5.அகில இலங்கை இந்துமாமனறம்

5) பிராமணன் என்ற சஞ்சிகையை பிரம்ம சமாஜம் வெளியிட்ட ஆண்டு
1.1860 2.1823 3.1760 4.1950 5.1875

6) துளசிதாசரால் மக்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஸ்ரீ ராமனிடம் முறையிட்டு எழுதிய நூல்
1.விநய பத்திரிகா 2.சத்திய பாமானுருசன் 3.ராகோவிந் 4.ராகமல்ஹார் 5.கவிதாவளி

7) மீராபாயின் வேதாந்த சிந்தனைகளை விபரிக்கும் நூலாக அமைவது
1.ருக்மணி மங்களம் 2.மீரா பஜனை 3.தாச போதம் 4.சத் போதம் 5.கபீர் பந்தி

8) ஆரிய சமாஜம் செல்வாக்குடன் வளர்ச்சி பெற்ற பிரதேசங்கள் முறையே
1.இலங்கை,இந்தியா,பாகிஸ்தான்,யாவா 2.பஞ்சாப்,ராஜஸ்தான்,உத்தரபிரதேசம்,மத்திய பிரதேசம்
3.ராஜஸ்தான், கம்போடியா, சுமத்ரா, சிங்கபூர் 4.இலங்கை, பாகிஸ்தான், தமிழ்நாடு, அமெரிக்கா
5.பஞ்சாப்,கம்போடியா,இலங்கை,யாவா

9) பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தவர்
1.விபுலானந்தர் 2.விவேகானந்தர் 3.ராஜாராம் மோகன்ராய் 4.தயானந்த சரஸ்வதி 5.இராமகிருஷ்ணர்

10) இந்து இஸ்லாமிய ஒற்றுமையை வலியுறுத்திய வட இந்திய வைணவ பக்தி நெறியாளர்
1.மீரா பாய் 2ஆண்டாள் 3.காரைகால் அம்மையார் 4.கபீர் தாசர் 5.ஸ்ரீ சைதன்யர்

11) அனுமான் சாலிகா எனும் அனுமானை புகழ்ந்து பாடும் நூலை இயற்றியவர்
1.இராமானந்தர் 2.விவேகானந்தர் 3.துளசிதாசர் 4.இராமானுஜர் 5.சங்கரர்

12) உடன் கட்டை ஏறும் பழக்கத்தை சட்டப்படி தடைசெய்த நிறுவனமாக அமைவது
1.விவேகானந்த சபை 2.ஆரிய சமாஜம் 3.இராமகிருஸ்ண மிஷன் 4.சைவ பரிபாலன சபை
5.பிரம்ம சமாஜம்

13) மீராபாய் இயற்றிய சமய கருத்துக்களை விளக்கும் வகையில் அமைந்த நூல்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி
1.ருக்மணிமங்களம்,யாழ்நூல்,மதங்கசூளாமணி 2.தாசபோதம்,சத்போதம்,ஆனந்தவன புவனம்

3.மீராபஜனை, கபீர்பந்தி தாச போதம் 4.மதங்கசூளாமணி,ருக்மணிமங்களம்,தாசபோதம் 5.ஆனந்தவன புவனம், மீராபஜனை, கவிதாவளி

14) ராம சரித மானசம் எனும் பெயரால் அழைக்கப்படுவது
1.விசிட்டாத்வைதம் 2.அத்வைதம் 3.துளசிஇராமாயணம் 4.இதிகாசம் 5.கம்பராமாயணம்

15) ஜீவன் பற்றி ''ஆண்டவனின் சேவகன் ஆண்டவனுடன்நெருங்கிய உறவுண்டு ஜீவன் ஆண்டவனாக மாட்டான்'' எனக்குறிப்பிட்டவர்
1.ஸ்ரீ சைதன்யர் 2.கைலாசநாத குருக்கள் 3.மத்துவர் 4.துளசிதாசர் 5.இரவீந்ரநாத் தாகூர்

16) பிரபக்தி மார்க்கத்தை மதுர பாவனையில் வெளிப்படுத்திய பக்தி நெறியாளர்
1.ஆண்டாள் 2.சூடிக்கொடுத்த நாச்சியார் 3.மீராபாய் 4.சாரதாதேவி 5.சகதர்மினி

17) ஆரிய சமாஜம் உருவான ஆண்டாக அமைவது
1.1666 2.1332 3.1560 4.1875 5.1840

18) சூறாவளி துறவி,வீரதுறவி,தேச பக்த மெய்ஞான என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுபவர்
1.விபுலானந்தர் 2.சுவாமி விவேகானந்தர் 3.இராமானுஜர் 4.சேர்.பொன்.இராமநாதன் 5.சிவபாதசுந்தரனார்

19) வைணவ சமய உண்மைகளை விளக்கும் நூல்கள் அடங்கும் தொகுதி
1.சிவ தொண்டன்,ருக்மணிமங்களம் 2.சைவக்காவலன்,கீதகோவிந்தடிகா 3.சைவ சித்தாந்தபானு,ராக மல்ஹார் 4.சிரசந்தீபனி,கீதகோவிந்தடிகா 5.கீதகோவிந்தடிகா,ருக்மணி மங்களம்

20) கீர்த்தனம்,வர்த்தனம்,பாதஷேவனம் முதலிய இரசபாவங்களுடன் பாடல்களை பாடியவர்
1.ஆண்டாள் 2.மீராபாய் 3.கபீர் தாசர் 4.இராமானந்தர் 5.ஞானபிரகாசர்

(2×20=40)

## பகுதி-2

**மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) வட இந்திய வைணவ பக்தி நெறியாளர்கள் தொடர்பாக மேல்வரும் விடயங்களை ஆராய்க.
(அ) வட இந்திய பக்தி நெறியாளர்களின் பொதுப்பண்புகள்
(ஆ)மீராபாயின் சமயப்பணிகள்
(இ)ஶ்ரீ சைதன்யர் (6+7+7=20)

2) இந்து நாகரிக வரலாற்றில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பணிகள் மகத்தானது.
(அ)சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கு ஏதுவான காரணங்கள்
(ஆ)பிரம்ம சமாஜத்தின் பணிகள் (8+12=20)

3) (அ) வட இந்திய பக்தி இயக்கத்திற்கும் பல்லவர் கால பக்தி இயக்கத்திற்கும் இடையிலான ஒற்றுமைகளை குறிப்பிடுக.
(ஆ)ஆரிய சமாஜத்தின் பணிகளை ஆராய்க (8+12=20)

4) இராமகிருஷ்ண பரஹம்சரின் போதனைகளையும்,சாதனைகளையும் விளக்குக.
(20 புள்ளி)